வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பிரச்சினை சர்க்கார் கவனத்தில் இருக்கிறது. எந்த முறையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றிச் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு ராமமூர்த்தி கொண்டுவந்துள்ள பிரச்சினை ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட காரியம் அல்ல. நிகழ்ந்து விடுமோ என்று அச்சப்படுவதான ஒன்று. நம்முடைய விதி 50 (3)-இன்படி,

"The motion must be restricted to a specific matter of recent occurrence."

எனவே இது நிகழ்ந்துவிட்ட காரியமாக இல்லையாதலால் இது ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உரியதல்ல என்று தீர்ப்புச்சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

(iii) கோவை, ஈரோடு நகரங்களில் 'தமிழர் படை'யின் நடவடிக்கைகள்

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஐயா, சட்டப்பேரவை 42-வது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்கச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி ஓர் அறிவிக்கையைக் கொடுத்துள்ளேன்:—

"ஈரோடு, கோவை ஆகிய நகரங்களில் தமிழர் படை (ஈரோடு) என்கிற பெயரால் ''தனித் தமிழ்நாடு காண்போம் வாரீர்'', ''இந்தியனே வெளியேறு'', ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்கிற கோஷங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு நாட்டின் ஐக்கியத்துக்கே ஏற்பட்டிருக்கும் ஆபத்துப் பற்றி விவாதிக்க வேண்டும். தலைவர் அவர்களே, இது எப்படி பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்க ஆசைப்படுகிறேன். கோவையில், ஈரோட்டில் தனித் தமிழ்நாடு இயக்கம் நடந்தது, தமிழ் நாட்டுக் கொடி என்று ஏற்றப்பட்டது. நாம் எல்லாம் தேசத்தின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதாகப் பிரமாணம் எடுத்துக்கொண்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் தேச ஐக்கியத்தையே பெரும் அளவில் கெடுக்கக்கூடிய அளவில் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னால் வெளிநாட்டுத் தூண்டுதல் சக்திகூட இருக்கிறதென்று நினைக்கிறேன். இதைவிட வேறு பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் எதுவும் இருக்க முடியாது. ஆகவே இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்."

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதுகுறித்துப் போலீஸ் இலாக்காவினர் தகவல்கள் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். நாட்டின் ஐக்கியத்தைக் கெடுக்கும்படியான எந்தக் காரியத்தையும் இந்தச் சர்க்கார் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. அன்றாட நடைமுறையை ஒட்டித்தகுந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட காரியம் அரசின் சாதாரண நிர்வாகத்துக்கு மிஞ்சிய காரியமாகக் கருத முடியாததால் இதற்கு அனுமதி மறுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

கடம்புலியூர் உள் வட்டத்தில் பருவமழையின்மையும், மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு வழங்கிய கடன் வசூல் ஒற்றிவைப்பும்

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ், தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டித் தொகுதியில் கடம்புலியூர் உள் வட்டத்தில் மண் அரிப்புத் திட்டத்தின்கீழ் கட்டிய அணைகளுக்கான